**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 428/2023**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சாலமன் ஞான ரூபன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. நான் கிருஸ்டியான்** | **Calling** | : | **Manager, Redmi Cell phone compay** |
| **Village** | : | **ஸ்ரீ மகாத்மா நகர்** | **Religion** | : | **கிருஸ்தவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **36** |
| | | | **Dated** | : | **20.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 4), **திரு. சாலமன் ஞான ரூபன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து Redmi Cell phone company யில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன லில்லி புளோரா என்னுடைய அம்மா. கடந்த 04.05.2023 ம் தேதி காலை 08.30 மணியளவில் NS நகரில் உள்ள காய்கறி கடைக்கு அவர் போயிருந்தார். காய்கறி வாங்கிக்கொண்டு அவர் பஸ் ஸ்டாப்பிக்கு எதிர்புறம் போயிருந்திருக்கிறார். பின்னாடி வந்த TN 57 CX 4546 என்ற எண்ணுள்ள ராயல் என்பீல்டு வண்டியை எதிரி லட்சுமணன்

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டிக் கொண்டு வந்து என் அம்மா மீது பின்புறமாக மோதியதில் அவருக்கு பின்தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அதைப் பார்த்த என்னுடைய உறவினர் தபாசாம் ஜோபு என்னிடம் சொன்னார். அவர் என் அம்மாவை 108 ஆம்புலன்ஸில் ஏற்றிவிட்டு அந்த ஆம்புலன்ஸோடு அவரும் போயிருக்கிறார். மருத்துவமனைக்குள் போவதற்குள் என் அம்மா இறந்துவிட்டதாக சொன்னார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இந்த விபத்து எப்படி நடந்தது என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், நான் மருத்துவமனை சென்று தான் பார்த்தேன் என்றாலும் சரிதான். இந்த விபத்து யாருடைய கவனக்குறைவினால் ஏற்பட்டது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 20.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2025.11.20 18:18:40 +0530

**Chief Judicial Magistrate,**

**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 428/2023**
**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராபர்ட் பெல்அர்மின்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ஜான்** | **Calling** | : | **விவசாயம்** |
| **Village** | : | **மைக்கேல் பாளையம்** | **Religion** | : | **கிருஸ்துவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **41** |
| | | | **Dated** | : | **20.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 6 (பட்டியல் சாட்சி 5), **திரு. ராபர்ட் பெல்அர்மின்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை :–**</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 04.05.2023ம் தேதி காலை 11.30க்கு NS நகரில் நானும், மேட்டுப்பட்டியைச் சேர்ந்த ராஜ்குமார் என்பவரும் நின்று கொண்டு இருந்தோம். அப்பொழுது தாடிக்கொம்பு போலீசார் வந்து மாதிரி வரைபடம் வரைந்து கொண்டு இருந்தார்கள். அதற்கு என்னிடம் கையெழுத்துக் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

அசா. 1 என்னுடைய மாமா. நான் வரைபடத்திற்காகத்தான் கையொப்பம் செய்தேன். எழுதிய தாளில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியும். அதில் ஒரு வரைபடம் வரைந்து அங்கிருந்த கடைகள், இந்த பக்கம் இருந்தது, அந்த பக்கம் இருந்தது, வடக்கிலிருந்து தெற்காக என்றெல்லாம் எழுதியிருந்தது. அசா. 1 எனது மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court on 20.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.11.20 18:18:48 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**